மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக துறைரீதியாக எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

183—

உயரழுத்த மின்மாற்றி

***1559—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 54-வது வட்டத்தில் உயரழுத்த மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய துறைமுகம் பகுதியில் மொத்தம் 200 மின்மாற்றிகள் இருக்கின்றன. 500 கே.வி.ஏ.–123, 250 கே.வி.ஏ.–70, 100 கே.வி.ஏ.–7 என 200 மின்மாற்றிகள் இருக்கின்றன. அதனால் அங்கே சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு ஏதாவது ஓர் இடத்தில் அதுபோன்று உயரழுத்த மின்மாற்றி தேவை என்று சொன்னால், அது உடனடியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

2017 ஜூலை 12]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். இன உணர்வு என்ற எண்ணெய்யை ஊற்றி, பகுத்தறிவு என்ற விளக்கை ஏற்றி, கொள்கை விளக்காய் கோபாலபுரத்தில் அமர்ந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். அந்த ஆலையிலிருந்து ஜுவாலையாய், அந்தக் கோபுரத்தின் வழி நடக்கும் கலங்கரைவிளக்காம், நகல் விளக்குகளை வீழ்த்தப்போகும் பகல் விளக்காம் எங்கள் தளபதியை வணங்குகின்றேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே சீரான மின்மாற்றிகளை வைத்து சீரான மின்சாரம் தருகிறோம் என்று கூறியதற்கு நன்றி. தற்போது 200 அல்ல, துறைமுகம் தொகுதியில் 500 உயர் மின்மாற்றிகள் இருக்கின்றன. தற்போது* latest technology*–யாக அந்த மின்மாற்றிகளை எடுத்துவிட்டு* R.M.U. *பொருத்துகின்ற பணி நடந்து வருகின்றது.* R.M.U. *என்பது மக்களிடத்திலே பெருத்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. துறைமுகம் தொகுதியைப் பொறுத்த அளவில் இந்த 500 மின்மாற்றிகளில் 20, 25 சதவீதம் மின்மாற்றிகளில்தான் இந்த* R.M.U. *பொருத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரான மின்சாரம் கிடைக்க முழுவதுமாக இந்த* R.M.U.*–ஐப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துறைமுகம் பகுதி என்பது 100 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட நகரம். இதில் இரண்டே இரண்டு துணை மின் நிலையங்கள்தான் இருக்கின்றன. ஒன்று தண்ணீர்த் தொட்டி தெருவிலே இயங்கிக்கொண்டிருக்கிறது. அது வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்ட* G.S.T. *எனப்படுகின்ற மின்சார* sub–station*. இன்னொன்று மலையப்பன் தெருவிலே இயங்குகிறது. மலையப்பன் தெருவிலே இயங்குகின்ற துணை மின் நிலையத்திற்கு* F.O.C. service centre *இருக்கின்றது. ஆனால், டெலிபோன் ஆப்பரேட்டர் இல்லை. தண்ணீர்த் தொட்டி தெருவிலே இயங்குகின்ற அந்த துணை மின் நிலையத்திற்கு* F.O.C. service centre *இல்லை. ஆகவே, அதிலே* Fuse off Call centre*–ஐ உருவாக்கி, டெலிபோன் ஆப்பரேட்டர் பதவியையும் உருவாக்கினால், பழுதுகளை உடனுக்குடன் தெரிந்துகொண்டு, பழுதுகளை நீக்குகின்ற சூழ்நிலை ஏற்படும்.*

சீரான மின்சாரத்தை வழங்குவதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் நீங்கள் 33/11 கிலோ வோல்ட் மின்சார அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று, பி.வி. ஐயர் தெருவில் ஓரிடத்தைத் தேர்வு செய்திருக்கிறீர்கள். அது காவல் துறைக்குச் சொந்தமான இடம். நீங்கள் காவல் துறைக்கு ஏற்கெனவே ராயபுரத்தில் மின்சார வாரிய இடத்தினை குவார்ட்டர்ஸ் கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். அந்த நட்புறவு அடிப்படையில், அந்த இடத்தை விரைவாகப் பெற ஆவன செய்ய வேண்டும். சமீபத்தில்கூட 29–7–2017 அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் 31 துணை மின் நிலையங்கள் சென்னையிலே புதிதாக ஏற்படுத்தப்படும் என்று கூறியிருந்தார்கள். அந்த 31 துணை மின் நிலையங்களில், இந்த பி.வி. ஐயர் தெருவில் அமைய இருக்கின்ற 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தையும் இணைத்துக்கொண்டு, விரைவாக அந்த இடத்தைக் கையகப்படுத்தி, சீரான மின்சாரம், தடையில்லா மின்சாரம், துறைமுகம் தொகுதிக்குக் கிடைப்பதற்கு வழிவகை காணவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் ஒரேயொரு திருத்தம். உங்களுடைய கேள்வி சௌகார்பேட்டையில் மின்மாற்றிகள் அமைத்துத் தர வேண்டுமென்பது. சௌகார்பேட்டையில்தான் 200 மின்மாற்றிகள் இருக்கின்றன என்று சொன்னேன். உங்களுடைய தொகுதி முழுவதும் நான் சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் முதலில் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன R.M.U. என்பது பாதுகாப்பானதும்கூட. சீரான மின்சாரம் வழங்குவதற்கும் வாய்ப்புள்ள யூனிட். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட விதி 110–ன்கீழ் அதை இப்போது எல்லா இடங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சமாக அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போது கிட்டத்தட்ட சென்னை மாநகரம் முழுவதுமே R.M.U. அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள்.

2017 ஜூலை 12]

அதை விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். படிப்படியாக அதை அமைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், இடம் கிடைப்பதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதி எங்களுக்கும் தெரியும். இப்போது அரசினுடைய கவனத்திற்கும் வந்திருக்கிறது. அங்கு மின்சார வாரியத்திற்கு இடத்தை மாற்றிக்கொடுத்த பின்னால்தான் துணை மின் நிலையம் அமைக்க முடியும். இதுபோன்ற இடங்கள் எங்கே இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். இப்போதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் 400 கே.வி. துணை மின் நிலையம் கோயம்பேட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரை, மின்சாரம் இருந்தாலும்கூட, சீரான மின்சாரம் வழங்கப்படாததற்குக் காரணம், துணை மின் நிலையங்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், ஒவ்வொரு பகுதியிலும் மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றபோது மின்வெட்டு வந்துவிடுகிறது. நாங்கள் இடங்களை ஆய்வு செய்து துணை மின் நிலையங்களை அமைக்கின்றபோதுதான் சீரான மின்சாரம் வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன காவல் துறைக்குச் சொந்தமான இடம் ஆய்விலே இருக்கின்றது. அந்த இடம் எங்களுக்குக் கிடைத்தவுடன் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணியை முடித்தவுடன், துறைமுகம் பகுதி முழுவதற்குமே சீரான மின்சாரம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சௌகார்பேட்டை பகுதியில் மொத்தமாக 22,500 கிலோ வோல்ட் அளவிற்கு வழங்குவதற்கு எங்களிடம் மின்சாரம் இருக்கிறது. ஆனால், தேவை 18,000 கிலோ வோல்ட் அளவிற்குத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அந்தப் பகுதி உடனடியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயரழுத்த மின் கம்பங்கள், மின்மாற்றிகள் அமைந்திருக்கின்ற இடங்களைச் சுற்றிப் பார்த்தால் குப்பைக் கூளங்கள், debris ஆகியவை நிறைந்து காணப்படுகின்றன. இதனால் மின்சாரக் கசிவு ஏற்படுகின்றபோது, தீப்பிடித்தல் போன்ற சம்பவங்கள் ஏற்படுகின்றன. இதனை மாநகராட்சியினரிடம் தெரிவித்தால், நாங்கள் அதற்குச் சுற்றுச் சுவர், பாதுகாப்பு வளையம் ஏற்படுத்த முடியாது என்று கூறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், ஓர் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, அந்த சுற்றுப்புறப் பகுதிகளில் platform அமைத்தால், அங்குள்ள தெருக்களும் அழகுறும்; இதுபோன்ற விபத்துகளும் தவிர்க்கப்படும். மின்சாரத் துறையைப் பொறுத்தளவில், போதிய பணியாளர்கள் இல்லாததால், திடீரென்று ஏற்படுகிற ஒரு சில பழுதுகளுக்கு contractors, ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஒப்பந்ததாரர்களை நியமித்து, அவர்கள்மூலம் அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு காலதாமதம் ஏற்படுவதால், போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். இதேபோன்று, கடந்த 1-7-2007 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் மின்சார வாரியத்தினுடைய பொன்விழா ஆண்டைக் கொண்டாடினார்கள். அப்போது, ஊழியர்களுக்குப் பரிசும், அதோடு சேர்த்து ஊதிய உயர்வும் வழங்கினார். 10 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்தாலும், தற்போது 2015 ஆம் ஆண்டு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதால், மின்சாரத் துறை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்ற வேண்டுதலோடு, மின்சார விபத்துகள் ஏற்படுகின்றபோது மின்சார வாரியத்தின் சார்பிலேதான் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு, கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: நல்ல ஆக்கபூர்வமான கோரிக்கைதான் வைக்கிறேன். கேள்வியே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்வியைத்தான் கேட்க வேண்டும்; கோரிக்கை வைக்க வேண்டாம். (குறுக்கீடு) கேள்வியைக் கேட்டு, முடியுங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவது போன்று பேசினால் எப்படி?

2017 ஜூலை 12]

திரு. பி.கே. சேகர்பாபு: கேள்வியைக் கேட்டு முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து எதுவும் அதற்குத் தரப்படுவதில்லை. ஏனென்றால், இது விபத்து. ஆகவே, மின்சார வாரியம் நிதியை வழங்கினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து இதற்கு நிதியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். நூறாண்டுகளைக் கடந்த துறைமுகப் பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதையொட்டியிருக்கின்ற பிற பகுதிகளுக்குச் செலுத்துகின்ற கவனத்தைப்போல், இதற்கும் செலுத்தி சீரான மின்சாரம், தடையில்லா மின்சாரத்தை வழங்க முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு வணங்கி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி அவரது தொகுதிக்குச் செல்பவர்தான். ஆனால், எல்லா தொகுதிகளையும்விட, அவருடைய தொகுதியில் அதிகமாகக் கவனம் செலுத்தியிருக்கின்றோம். அதற்கு உதாரணம் சொல்லவேண்டுமென்று சொன்னால், அங்கு mosque-தொழுகை நடத்துகின்ற இடத்திலுள்ள transformer–ஐ மாற்றித் தர வேண்டுமென்று அங்குள்ள முஸ்லிம் பெருமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, உடனடியாக (குறுக்கீடு) நீங்களும் கோரிக்கை வைத்தீர்கள்; (குறுக்கீடு) அதைத்தான் நான் சொன்னேன்; நீங்கள் தொகுதிக்குச் செல்பவர் என்றுதானே சொன்னேன்; நீங்கள் போகவில்லை என்று சொல்லவில்லையே? அதனால், அதை உடனடியாக மாற்றியமைத்திருக்கின்றோம் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எதிர்க்கட்சி உறுப்பினரின் கோரிக்கை என்றாலும்கூட, மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு இது ஓர் உதாரணம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்வி, நல்ல கேள்வி. அதைத்தான் நாங்களும் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். Transformer இருக்கின்ற பகுதியைப் பாதுகாப்பாக நாம் வைக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அங்கு குப்பை

இருக்கின்றது என்று சொன்னார். குப்பையினால் தீ விபத்து ஏற்படுவதால் மின்சார வாரியத்திற்கு மட்டும்தான் சேதாரம் ஏற்படும். ஆனால், Transformer இருக்கிற இடத்திலே இயற்கை உபாதைக்காகச் செல்லும்போது விபத்து ஏற்படுகின்றது. அப்படி விபத்து ஏற்படுகின்றபோது, உயிரிழப்பு ஏற்படுகின்றது. அதனால், நாங்கள் மின்சார வாரியத்தினரிடம் கலந்தாலோசித்து, இப்போது படிப்படியாக மின்மாற்றிகளைச் சுற்றி வேலி அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றோம். ஆகவே, எந்தெந்தப் பகுதிகளில் அப்படி இருக்கின்றதோ அந்தந்தப் பகுதிகளில் எல்லாம் முன்னுரிமை அடிப்படையில் சுற்று வேலி அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சார வாரிய பொன் விழா ஆண்டில் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது வைர விழா ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுபோன்று பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடர் முடிவடைந்ததற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்தாலோசித்து, எதுவெல்லாம் முடியுமோ, அதையெல்லாம் ஆராய்ந்து, அந்த ஊழியர்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், போதிய ஊழியர்கள் இல்லை என்று சொன்னார்கள். இப்போது தேவையான ஊழியர்களைத் தேர்வு செய்துகொண்டிருக்கின்றோம். எங்கெங்கு தேவையிருக்கின்றதோ, அந்தந்தப் பகுதிகளில் உடனடியாக அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது தொடர்பாக, சௌகார்பேட்டையில் கூடுதலாக 11 மின்மாற்றிகளை கடந்த நவம்பர் மாதம்தான் மாற்றியிருக்கின்றோம். தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து நவீன அரிசி ஆலைகளுக்கும் தற்போது வழங்கப்படும் குறைந்த மின்னழுத்த

2017 ஜூலை 12]

மின்னூட்ட மின்மாற்றி L.T.C.T. மின்னிணைப்பில் 112 கிலோ வோல்ட் மின் திறன் உள்ளதாக இருக்கிறது. பொது மக்களின் அத்தியாவசிய பொருளான அரிசி உணவைத் தயாரிக்கும் நவீன அரிசி ஆலைகளில், 150 கிலோ வோல்ட் மின் திறன் கொண்ட மின்மாற்றிகளை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அந்த அரிசி ஆலைகளில் மின் பளுவின் தேவைக்கேற்ப, அதை உடனடியாக அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, மாற்றி அமைத்துத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அமைதியாக இருங்கள், வாய்ப்புக் கிடைக்கும்.*

184—

ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***614—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதி, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*